3. தகவல் கோரல்

ஜி.எஸ்.டி. வரி விதிப்பினால் திரைப்படத் துறை பாதிப்பு மற்றும் கேளிக்கை வரி ரத்து செய்தல்

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்கு மற்றும் சேவை வரி, G.S.T. சட்டத்தால் திரையுலகமே இன்றைக்கு ஒரு கேள்விக்குறியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 100 ரூபாய் டிக்கெட்டுகள் இருந்தால் 18 சதவிகித வரியும், 100 ரூபாய்க்கு மேலே இருந்தால், 28 சதவிகித வரியும் விதிக்கக்கூடிய G.S.T.–ஆல் சினிமா தொழில் முற்றிலும் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு இன்றைக்கு உருவாகியிருக்கிறது. குறிப்பாக, திரையுலகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய புகழ்மிக்க திரு. கமலஹாசன் அவர்கள், திரு. ரஜினிகாந்த் அவர்கள் உள்ளிட்ட கலையுலகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அத்தனைபேரும் இதற்காக தங்களுடைய கவலைகளை, வருத்தங்களைத் தொடர்ந்து தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் G.S.T. வரியோடு கேளிக்கை வரி 30 சதவிகிதம் என்று மாநில அரசு முடிவு செய்திருக்கக்கூடிய காரணத்தினால், திரையுலகம் மேலும் அதிர்ச்சி அடைந்திருக்கிறது. 65 சதவிகித வரி செலுத்தி எப்படி சினிமா தொழில் செய்யமுடியும் என்று அவர்கள் வேதனைக்கு ஆளாகியிருக்கின்றனர். இந்தக் காரணத்தால் திரையரங்குகள் எல்லாம் இன்றைக்கு முழு அடைப்புப் போராட்டத்தை, தொடர்ந்து இன்றோடு 4–வது நாளாக நடத்திக்கொண்டிருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் 1989 ஆம் ஆண்டில் 54 சதவிகிதமாக இருந்த கேளிக்கை வரியை 40 சதவிகிதமாகக் குறைத்தது. பிறகு 40 சதவிகித கேளிக்கை வரியும் 1–8–1998 முதல் 30 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் மேலும் 25 சதவிகிதமாக கேளிக்கை வரி குறைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல; 22–7–2006 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 72–ன்கீழ், தமிழ்ப் பெயர் கொண்ட திரைப்படங்களுக்கு முழு கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரி விலக்கு தமிழ்ப் பெயர் உள்ள பழைய படங்களுக்கும், copyright வைத்திருக்கக்கூடிய தமிழ்ப் படங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இதுதவிர, திரைப்படத் துறையினருக்காக பல்வேறு சாதனைகளை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் உருவாக்கித் தந்திருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில், திரையுலகத்தினரின் கவலைகளைப் போக்கக்கூடிய வகையில், சினிமா தொழில் நலிவடைந்துவிடாமல்

பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. சினிமா தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்கள் இருக்கின்றனர். எனவே, அவர்களுடைய நலன் கருதி, 30 சதவிகித கேளிக்கை வரி விதிக்கக்கூடிய முடிவை மாநில அரசு கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 'மத்தளத்திற்கு இருபுறம் அடி' என்று சொல்வார்கள். அதுபோல, சினிமா துறைக்கு G.S.T. *மூலம் 28 சதவிகித வரி, மாநில அரசின் மூலமாக 30 சதவிகித வரி. மத்திய அரசின் முழக்கம் என்னவென்று கேட்டீர்களேயானால், 'ஒரே நாடு, ஒரே வரி'. ஆனால், அதற்கு எதிராக இருக்கக்கூடிய வகையில் இரட்டை வரி விதிப்பு இன்றைக்கு சினிமா உலகத்தைப் பொறுத்தவரையில் சூழ்ந்திருக்கிறது.* G.S.T. *வந்தவுடன் கேரள மாநில நிதியமைச்சர் திரு. தாமஸ் ஐசக் அவர்கள் கேரளாவிலே கேளிக்கை வரி ரத்து செய்யப்படும் என்று வெளிப்படையாக அறிவித்திருக்கிறார். அதேபோல, மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில், 100 ரூபாய் டிக்கெட்டுக்கு வசூலிக்கப்படக்கூடிய 18 சதவிகித* G.S.T. *வரியில் மாநில அரசின் பங்காக இருக்கக்கூடிய 9 சதவிகிதத்தில் 7 சதவிகிதத்தை சினிமா பார்ப்பவர்களுக்கே வழங்கி, டிக்கெட் விலை குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, 100 ரூபாய்க்கு மேலிருக்கக்கூடிய டிக்கெட்டுகளின் 28 சதவிகித* G.S.T. *வரியில், மாநில அரசின் பங்கான 14 சதவிகிதத்தில், 12 சதவிகிதத்தை படம் பார்க்கக்கூடியவர்களுக்கே வழங்கி டிக்கெட் விலை குறைக்கப்பட்டிருக்கிறது.* G.S.T. *வரி மூலமாக மாநில அரசுக்குக் கிடைக்கக்கூடிய வரியை, இப்படி படம் பார்க்கக்கூடியவர்களுக்கே வழங்கி, போராட்டங்களுக்கு வழிவகுக்காமல் சினிமா தொழிலைக் காப்பாற்ற முன்வந்திருக்கிறது மேற்கு வங்க அரசு. கேரள அரசு கேளிக்கை வரியை ரத்து செய்திருக்கக்கூடிய நிலையில், அப்படி ஒரு கொள்கை முடிவை தமிழகத்தில் எடுத்து, சினிமா தொழிலை விரைவில் பாதுகாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 11–20

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா உலகம் இந்த உலகம். அதிகமான மக்கள் சினிமாவைக் காண திரையரங்குகளுக்குச் செல்வது வழக்கம். வீட்டில் டி.வி. இருந்தாலும்கூட, அன்றாடம் தங்களுடைய பொழுதுபோக்கிற்காக சினிமாவைக் காணச் செல்கின்றனர். அதற்கும் கேளிக்கை வரி அதிகமாக இருப்பதால் இரட்டை வரிகள் செலுத்துகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே மத்திய அரசு ஒரு வரியைத் திணித்திருக்கிறது. தமிழக அரசு மேலும் ஒரு வரியைத் திணித்தால் இரட்டை வரிகளாகிவிடுகின்றன. அதிகமான கஷ்டம் ஏற்பட்டுவிடும். மற்ற மாநிலங்களைப் பார்க்கிறபோது அப்படிப்பட்ட ஒரு வரி இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, மேற்கு வங்க மாநிலத்தில் வரியை ரத்து செய்து, இன்னும் சினிமாத் துறையை* promote *செய்யக் கூடிய வகையில் செயல்படுகிறார்கள். இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், சினிமா ஸ்டார்களுக்கு மிகவும் முக்கியத்துவம் இருக்கிறது. உலகமே வியக்கும் அளவிற்கு சினிமாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு அந்த வரியைக் குறைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதை வலியுறுத்தி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டத்தின்படி, கேளிக்கை வரி என்பது உள்ளாட்சிகளுக்கே உரியதாகும். இதுவரை இந்த வரியை நிருவாக நலன் கருதி, மாநில அரசு வசூலித்து நிருவாகச் செலவு போக மீதித் தொகையை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளித்து வந்தது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அமல்படுத்த மத்திய அரசு உத்தேசித்தபோது, கேளிக்கை வரியை மாநில அரசு வசூலித்தால், அது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குள் உட்படுத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. கேளிக்கை வரி உள்ளாட்சி அமைப்புகளுக்கான வரி என்பதால், அதை*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வசூலித்துப் பயன்படுத்தும் அதிகாரத்தை உள்ளாட்சிகளுக்கே வழங்கும்பொருட்டு, ஏற்கெனவே இருந்த தமிழ்நாடு கேளிக்கைகள் வரி சட்டத்தை ரத்து செய்துவிட்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017-க்கு 24-6-2017 அன்று இந்த மாமன்றத்தில் ஒப்புதல் பெற்று, 1-7-2017 அன்று அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி, தமிழக அரசு ஏற்கெனவே கிராமப்புறங்களில் வசூலித்து வந்த 20 சதவிகித கேளிக்கை வரியையும், நகர்ப்புறங்களில் வசூலித்து வந்த 30 சதவிகித கேளிக்கை வரியையும் தொடர்ந்து உள்ளாட்சிகள் வசூலிக்க வேண்டும். இவ்வாறு உள்ளாட்சிகளால் தொடர்ந்து வசூலிக்கப்பட்டு வந்த வரிதான் இவ்வரி. புதிய வரியில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே உள்ளாட்சிகளுக்காக அரசால் வசூலிக்கப்பட்டு வந்த வரியை தற்போது உள்ளாட்சிகளே நேரடியாக வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது மத்திய அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டத்தின்படி, கட்டணம் ரூ.100/-க்குக் குறைவாக நுழைவுக் கட்டணம் இருக்குமேயானால், 18 சதவிகித வரியும், ரூ.100/-க்கும் மேல் நுழைவுக் கட்டணம் இருக்குமேயானால் 28 சதவிகித வரியும் வசூலிக்க வழிவகுக்கிறது. இந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின்படி வரியானது நுழைவுக் கட்டணத்தின்மேல் கூடுதலாக நுகர்வோரிடமிருந்து வசூலித்துச் செலுத்தப்பட வேண்டும். ஏற்கெனவே திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில், பல இனங்கள் மத்திய அரசின் சேவை வரிக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும், அவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. தற்போது, அது விலக்கப்பட்டு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின்கீழ் சேவை வரியாக விதிக்கப்பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்பது மத்திய, மாநில அரசுகளுக்கான சேவை வரியாகும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அட்டவணை 6, பட்டியல் 2, நுழைவு 62-ன்படி கேளிக்கை வரி விதிக்கும் அதிகாரம் உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்பட்டுள்ளதால், உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரியை விதிக்கின்றன. எனவே, கேளிக்கை வரியையும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியையும் இரட்டை வரிகளாகக் கருத முடியாது.

மேலும், கேளிக்கை வரி, அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணத்திற்குள் உள்ளடக்கமானதாகும். எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பின்படி, 18 சதவிகிதம் அல்லது 28 சதவிகிதம் மட்டுமே கூடுதலாக நுகர்வோரிடம் வசூலிக்கப்பட வேண்டும். இவ்வாறு நுகர்வோரிடம் வசூலித்து வழங்குவதால், திரையரங்குகளுக்கு பாதிப்பு இருக்காது. மேலும், திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு, திரையில் வெளியிடும்வரை பல்வேறு நிலைகளில் செலுத்தப்படும் சேவை வரியை ஈடு செய்து, நிகர தொகை மட்டுமே செலுத்த வேண்டும். இந்நிலையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியைக் கூடுதலாக நுகர்வோரிடமிருந்து வசூலித்து செலுத்தப்பட வேண்டுமென்று தெளிவுபடுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு அப்படங்களுக்குத் தொடருமா என்பது பற்றியும், பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைக் கட்டணங்களை உயர்த்துவது பற்றியும் சில கோரிக்கைகள் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை 3–7–2017 அன்று திரைப்படத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் சந்தித்தனர். கேளிக்கை வரிக்கு முழு விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். கேளிக்கை வரி என்பது உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கும் முக்கிய நிதி ஆதாரங்களில் ஒன்று என்பதை அவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளோம். மேலும் அவர்கள் எழுப்பியுள்ள மற்ற கோரிக்கைகளைப் பரிசீலிப்பது குறித்து திரைப்படத் துறையினருடன் இதுவரை இரண்டு கட்டங்களாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. மீண்டும் இன்று மதியம் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நானும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும், Chief Secretary, Finance Secretary மற்றும் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் ஆகியோர் அனைவரும் கலந்துகொண்டு, பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்று மதியம் அந்தப் பேச்சுவார்த்தை நடக்கவிருக்கிறது. கண்டிப்பாக இதுபற்றி தீர ஆராய்ந்து

கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாக நல்ல முடிவை எடுப்பார்கள்.

முற்பகல் 11–25

அதேபோல, இது புது வரி அல்ல என்பதையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இது உள்ளாட்சி அமைப்புகளில் தொடர்ந்து இருந்த வரி என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். இன்றைக்கும் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். உள்ளாட்சிக்கு வரவேண்டிய நிதியைப்பற்றி அவர் குறிப்பிட்டுச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உள்ளாட்சிகளுக்கு நிதி வேண்டும் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. GST வரியில் மாநில அரசினுடைய பங்காக இருக்கக்கூடிய 9 சதவிகிதம் மற்றும் 18 சதவிகிதத்திலிருந்து உள்ளாட்சிகளுக்கு நீங்கள் நிதி வழங்கலாம். நாம் எப்படி மத்திய அரசிடமிருந்து நிதியை எதிர்பார்க்கிறோமோ, அதேபோல, உள்ளாட்சி அமைப்புகளும் மாநில அரசிடமிருந்து நிதியை எதிர்பார்ப்பதில் தவறில்லையே என்ற அந்தக் கருத்தை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்ன? உட்காருங்கள். அவ்வளவுதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள் சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் உட்காருங்கள்.